Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 63
போன் : 389

மலர் 18
இதழ் 38
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 6 முஹறம் 22 சனிக்கிழமை (20-3-71)

மக்கள்
விரும்பி
வாங்குவது
எவர்
பிறைற்
சோப்




மணம்
குணம்
சுவை
நிறைந்தது
பிறேமா
லோட்டஸ்
தூள்
தேயிலை

பிறேமா தொழிற்சாலை
பருத்தித்துறை.

# பொய்வதந்திகளை பரப்பினால் இருபது வருடச் சிறை

## எம். ஸி. விரைவில் லண்டன் போகிறார்

யாழ்ப்பாணம், சனி

நியமன எம் பி திரு எம் ஸி சுப்பிரமணியம் தொழிற் சங்கம் சம்பந்தமான நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக விரைவில் லண்டன் செல்லவிருக்கிறார் இவருடன் திரு. செல்லையாவும் தொழிற்சங்கம் சம்பந்தமான பயிற்சிபெறச் செல்வார்.

வடபகுதி கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் இவர்கள் இருவரையும் அனுப்பிவைப்பதென்று முடிவுசெய்யப்பட்டது லண்டனிலிருந்து கிடைத்த அழைப்பை ஏற்றே இவர்கள் செல்ல இருக்கிறார்கள். (குவிம)

## ஏற்று இறக்குமதி

கோட்டை, வெள்ளி

சென்றவாரம் கொழும்பு துறைமுகத்தில் இறக்குமதிப் பொருட்கள் 38,259 தொன் ஏற்றுமதிப்பொருள்கள் 10,269 தொன்னுமாக மொத்தம் 49,528 தொன் ஏற்று இறக்குமதி செய்யப்பட்டன

லாவோஸ் தாக்குதல்

## தென் வியட்னுமியர் கைவிட்டனர்?

சைகோன், மார்ச் 19

லாவோஸில் தென்வியட்னும்படைகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளை கைவிட்டிருக்கிறார்கள்.

லாவோஸில் ஹோ-சி-மின் பாதைப் பிரதேசத்தில் வியட்காங்கியருக்கு 'சப்ளை' கள் செய்யும் வழிகளை அடைப்பதற்காக தாக்குதல் நடத்திவந்த தென் வியட்னும் படைகள் திரும்பி வந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது- கம்யூனிஸ்டுகளின் கடும் தாக்குதல்களுக்குள்ளான தென் வியட்னும் படைகள் இது வரை இல்லாத வகையில் பெரும் நஷ்டத்துக்குள்ளானதாக கூறப்படுகின்றது.

சுமார் 100 சிப்பாய்களை தென்வியட்னுமியர் இழந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. தென் வியட்னுமியரின் சிறு முகாம் ஒன்றை கம்யூனிஸ்டகள் துவம்சம்செய்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

## இதுவரை நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கைது!

கொழும்பு, வெள்ளி

அவசரகாலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் நாசவேலைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் நூற்றுக்குமேற்பட்ட சேகுவேரா அங்கத்தவர்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

பொய்வதந்திகளைப் பரப்பினால், 3மாதத்திற்குக் குறையாமலும் 20 வருடத்திற்கு மேற்படாலும் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

நாட்டின் நாசகாரசக்திகள் தலையெடுப்பதைத் தடுக்கவும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவும், அவசரகாலநிலைமையைபிரகடனப்படுத்தியதைத்தொடர்ந்து நாட்டின் பலபகுதிகளிலும் சந்தேகத்தின்பேரில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை இன்றுமாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் செய்தித்துறை இயக்குநர் திரு. சரத்அமுனுஹம தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது. ஹெட்டிபொல, நோட்டன்பிரிஜ், நுவரெலியா, நீர்கொழும்பு, காலி, அஹிமன, மாதகலை, திருகோணமலை, பதுளை, மொனருகலை, தம்புள்ள, கேகாலை, ...த்துகம, திசமாரு போன்ற பகுதிகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். காலிப்பகுதியில் கைக்குண்டு டைனமைற் மற்றும் வெடிப் பொருட்கள் செய்வதற்கு வேண்டிய பொருட்களை வைத்திருந்த 12 பேரைப் பொலிசார்கைதுசெய்தனர் திருகோணமலையில் டைனமைட், துப்பாக்கிரவைகளுக்கான மருந்துகளும் வெடிசெய்வதற்கான மருந்துப்பொருட்களும் வைத்திருந்த நால்வரைப் பொலிசார் கைது செய்தனர். இந்நால்வரில் ஒருவர் பயிற்றப்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ் மேயர்மீது நம்பிக்கையில்லா பிரேரணை

### 12 உறுப்பினர் கைச்சாத்து

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் திரு ரி.எஸ் துரைராஜா மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பன்னிரண்டு அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டு மாநகர சபை ஆணையாளரிடம் நேற்றிரவு கையளித்துள்ளனா

திருவாளர்கள் தம்பு கந்தையா, வே. வி. தெய்வேந்திரம், சே எஸ் நடராஜா எம் ஸி பசீர், காதர், அல்பிரட் துரையப்பா, எஸ் ஜே அன்ரனி, ஏ விஸ்வநாதன், என் மார்க்கண்டு, எம் எஸ் பேரின்பநாயகம், ஜே வீரசிங்கம். திருமதி அந்தோனியா சுவாமிநாதன் ஆகியவர்கள் இதில் கைச்சாத்திட்டுள்ளனர்.

23 உறுப்பினர்களைக் கொண்டது யாழ். மாநகர சபை. இப்பிரேரணைபற்றி விவாதிப்பதற்காக விரைவில் மாநகரசபைக் கூட்டம் ஒன்று நடைபெறுமென்று ஆணையாளர் திரு ஏ ரி சுந்தரம் கூறினார்.

மற்றும் 10,403 நைலெக்ஸ் சேலைகள்

மார்ச் 24ம் திகதி சீட்டிழுப்பில்

இறக்குமதி செய்யப்பெற்று உள்ளூரில் அச்சடித்துத் தயாரித்த 6 யார் 45"

நைலெக்ஸ் சேலைகள்

தலா ரூபா 49-50 சதத்தை விசேஷ விலையாகக்கொண்டது.

சிங்கள - தமிழ் புதுவருட விசேஷ பரிசுகளாக

தேசிய லொத்தர்சபை இவற்றை உங்களுக்கு வழங்குகிறது:

இன்றே ஒரு சுவீப் டிக்கட்டைப் பெற்று

நைலெக்ஸ் ... பரிசாகப் பெறுங்கள்.

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலைமையிலுள்ள E L 6000 தொடர்பிலக்கமுள்ள A 30 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஆ. பேரம்பலம் அன் சன்ஸ் 8, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2716

**தேவை**

சகல விதமான தையல் தெரிந்த பெண்கள் உடன் விண்ணப்பிக்கவும். ஆசிரியை, யாழ் இளைஞர் கழகம், 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் 2715

நெசவு நெய்வதற்கும், நூல் சுற்றுவதற்கும் பெண்கள் தேவை. காலை 8 தொடக்கம் மாலை 4 வரை தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு லக்கானியாய் 6/4 கன்னதிட்டி லேன், யாழ்ப்பாணம். 2470

## 14 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கோட்டை, வெள்ளி

இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் வீடுகட்டுவதற்குக் கடன் கொடுப்பதற்காக 14 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. 3 வருடத்தில் இக்கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும் ஆகக் கூடுதலாக ஒரு விண்ணப்பக்காரருக்கு 25 ஆயிரம் ரூபா கொடுக்கப்படும் எனத் தெரிகிறது.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் வீட்டுக் கடனுக்கு விண்ணப்பித்தவர்களில் 367 விண்ணப்பக்காரருக்கு இப்பணம் கடன் தொகையாகக் கொடுக்கப்படும். எஞ்சிய விண்ணப்பதாரர்களுக்கும் கடன்வழங்கப்பட்டதும் புதிய விண்ணப்பங்கள் கோரப்படுமெனத் தெரிகிறது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் ஜெயலலிதா நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி முத்துராமன் - நிர்மலா நடித்த
வீட்டுக்கு வீடு

WINDSOR - JAFFNA
Winner of 11 Academy awards including "Best Picture"
From Metro - Goldwyn - Mayer
William Wyler's
Presentation of
BEN HUR
Time 10-00 A.M.. 2-30, 7-00P. M.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ' தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக...,





ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - வாசு
நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


## சாவகச்சேரி நகரசபை கேள்விப்பத்திர விளம்பரம்

சாவகச்சேரிச் சந்தையில் இரு கடைகள் நிறுவுவதற்கு இந்நகரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் அழைக்கப்படுகிறது.

கேள்விப்பத்திரம் 5-4-71-ந் திகதி பிற்பகல் 2-00 மணிவரை இந்நகரசபை அலுவலகத்தில் அதற்கான வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகு போட்டு அடையாளம் வைத்து, 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப்பெட்டிக்குள்போட வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறிய வேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சு. கனகரத்தினம்,
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
10-3-71. 3213

## அன்பளிப்பு

கோட்டை, வெள்ளி

பத்தாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் நூல்கள் போன்ற கல்விச்சாதனங்களை ஐக்கிய அரபுக் குடியரசு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை இலங்கையிலுள்ள ஐ. அ. குடியரசு ஸ்தானிகர் ஜனாப் கே. ஏ. முஸ்தாபா இவற்றைக் கல்வி அமைச்சரிடம் ஒப்படைத்தார்.


நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி நடித்த
அஞ்சல்பெட்டி 520

இன்றுமட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ராமாராவ் அஞ்சலிதேவி நடித்த
பால நாகம்மா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா நடித்த
அடிமைப்பெண்

REGAL - Jaffna
Daily 3 shows
Poya days 4 Shows
Peter Sel'ers
Claudine Longet
in
THE PARTY

MANOHARA
Jaffna
10-30, 4-45, 7&9-45p.m.
Espionage
in
LISBON
AGENT-077
Spy Film


# இறந்து கிடந்த இளைஞர்!
## தற்கொலை எனத் தீர்ப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

16 வயதுள்ள இளைஞர் ஒருவர் கிருநாசினி அருந்தித் தற்கொலைசெய்து கொண்ட சம்பவம் ஒன்று குப்பிளானில் நேற்று நடைபெற்றது.

குப்பிளானைச் சேர்ந்த வல்லிபுரம் பாலசிங்கம் என்ற இளைஞர் வீதியில் இறந்துகிடப்பதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. சுன்னாகம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த எட்வேட் விசாரணை நடாத்தினார்.

இவரின் மரணம் குறித்து ஏழாலைப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி இ. பாலசுப்பிரமணியம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

இம்மரணம் குறித்து சம்பந்தர், சிவஞானம் உட்படபலர் சாட்சியமளித்தனர். யாழ். வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் பாலசிங்கம் பிரேதபரிசோதனை நடாத்தினார்.

## உபகாரச் சம்பளம்

கோட்டை, வெள்ளி

இத்தாலிய பல்கலைக் கழகங்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பயிற்சி பெறுவதற்காக இத்தாலிய அரசாங்கம் இலங்கைப் பட்டதாரிகள் இருவருக்கு உபகாரச் சம்பளம் வழங்க முன்வந்துள்ளது.

## நாஸ்திகம் வளரக் காரணம்

மீசாலை, வெள்ளி

"இன்று சமய தீட்சை பெறாதவர்கள், சைவசமயிகள் அல்லாதோர் சைவசமயிகளாயபோதிலும் சமய அறிவு அற்றவர்கள் எல்லாக் கல்லூரிகளிலும் சைவசமயபாடம் போதிக்க அனுமதிக்கப்பட்டிருப்பதாலதான் இன்று சைவ சமயத்தின் மகிமை குறைந்துள்ளது. நாஸ்திகம் மிகுந்துள்ளது."

இவ்வாறு மயிலிட்டி தெற்கு ஞான வயிரவர் ஆலயத்தில் திரு. வ. வே. சண்முகநாதக்குருக்களின் ஆசாரியாபிஷேகத்தின் பின் பண்டிதர் திரு. இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்திய பண்டிதர் வ. முத்துக்குமாரு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இஸ்லாம் போதிப்பதற்கு மௌலவிகளே அனுமதிக்கப்படுகிறார்கள், கிறிஸ்து வேதம் போதிப்பதற்கு கிறிஸ்து மதத்தில் பாண்டித்தியமுடையவர்களே அனுமதிக்கப்படுகிறார்கள். உடற்பயிற்சி போதிப்பதற்கு கூட உடற்பயிற்சி பெற்ற ஆசிரியர்களே அனுமதிக்கப்படுகிறார்கள் ஆனால் சைவ சமயம் போதிப்பதற்கு மட்டும் ஆசிரியர் என்ற பெயர் கொண்ட எல்லோருமே அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் பொறுப்பற்ற முறையிற் சமயபாடப் புத்தகத்தில் இருக்கும் விடயங்களை வாசித்துக் காட்டிவிட்டு இதில் எனக்கும் நம்பிக்கை இல்லை ஆனால் புத்தகத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்கிறார்கள். இதனாலேயே இன்று நாஸ்திகம் பெருகுகிறது சைவம் அருகுகிறது" என்றார்.

மற்றும் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை வித்துவான் திரு. சோ. சொக்கலிங்கம், சங்கீதபூஷணம் திரு. ஆ. குமாரசாமி, ஆசிரியர்கள் திருவாளர்கள் சி. நாகலிங்கம், ச. கந்தவனம், ஆ. தி. சுப்பிரமணியம், ச. கோபால், இரகுநாதன், ஆ. தியாகராசா ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

## நெல்லியடி ப. ச. உறுப்பினர் கோரிக்கை

பருத்தித்துறை, வெள்ளி

நெல்லியடிப் பட்டினசபைக்குட்பட்ட, ஆயுள்வேத வைத்தியசாலை, அரசினர் மருத்துவசாலையிலும் பார்க்க சிறப்பாக இயங்குவதால், அங்கு முதலுதவிச்சிகிச்சை வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் நோயாளிகளுக்கும் ஊழியருக்கும் மலசல கூடம் அவசியமென்றும் அங்குள்ள உபகரணங்களைப் பாதுகாக்காக ஒரு காவலாளியை நியமிக்க வேண்டுமென்றும் கோரும் ஒரு பிரேரணையை நெல்லியடிப் பட்டினசபையின் 5-ம்வட்டாரப் பிரதிநிதி திரு ந. கனகசுந்தரம், தலைவரிடம் சமர்ப்பித்துள்ளார். மேலும் இவ்வாண்டு சோலைவரி முன்னைய ஆண்டிலும் கூடுதலாக விதிக்கப்பட்டுள்ளமையால், வரியிறுப்பாளரிடையே மிகுந்த அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் இதுவரை பெயரிடப்படாத வீதிகளுக்குப் பெயரிடவேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

## பஸ்ஸுக்கு கல் வீசினாராம்

தாவடி, வெள்ளி

புதன்கிழமையன்று பிற்பகல் பஸ் வண்டிக்குக் கல் வீசிய சம்பவமொன்று கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் நடந்ததாகத் தெரியவருகிறது. காங்கேசன்துறை வீதியால் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியே கல்வீச்சுக்கு இலக்கானது. பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

## தேசிய பால்சபை பொறுப்பேற்கும்

கோட்டை, வெள்ளி

தற்போது தனிப்பட்டவர்களினால் நடாத்தப்பட்டு வரும்பால் விநியோக நிலையங்களை மிக விரைவில்தேசிய பால்சபை எடுத்து நடாத்தவிருக்கிறது.

## காலவரையறையின்றி ஒத்திவைப்பு

மீசாலை, வெள்ளி

சாவகச்சேரி பட்டினசபை கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சமீப காலத்தில் நடைபெற்ற கூட்டங்கட்கு செயலாளர் சமூகமளிக்காது தனது சிரேஷ்ட எழுதுவினைஞரைக் கூட்டத்திற்கு அனுப்பியதை அங்கத்தினர்கள் அனைவரும் எதிர்த்துள்ளனர். இதனால் முக்கிய நிகழ்ச்சிகள் தாமதம் அடையப் போவதாக நகரசபைத் தலைவர் திரு சு. கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் கௌரவ சுகாதார மந்திரி தலைவர்: டாக்டர் கே. கனகரத்தினம், உப தலைவர்கள்: முதலியார் சி முத்துத்தம்பி, திருமதி ஏ சுவாமிநாதன், காரியதரிசி: திரு ஏ குலேந்திரன். உதவிக் காரியதரிசி: டாக்டர் டி ரி செல்வத்துரை, தனாதிகாரி: திரு கே. ஐயாத்துரை, உதவி தனாதிகாரி: திரு சி முத்துக்குமாரசுவாமி.

நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். டாக்டர்கள் ஏ வி ஏ வேதநாயகம், வி ரி பசுபதி, எம். கணேஷநாதன், எஸ் ராஜரத்தினம், ஆ ஈ டபிள்யூ ஜோசரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைசூர் மாநில சட்டசபைக்கும் இடைக்காலத் தேர்தல்?

## மாற்று அரசு அமைப்பது பற்றியும் ஆலோசனை

பெங்களூர், மார்ச் 19

**மைசூர் மாநிலத்தில் மாற்று அமைச்சை நிறுவுவதா அல்லது சட்ட சபைக்கு இடைக்கால தேர்தலை நடத்துவதா என்ற பிரச்னை எழுந்துள்ளது**

மாற்று அமைச்சு நிறுவவதென்று மைசூர் மாநில இந்திரா காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருந்தபோதிலும் புதிதாகத் தேர்தல் ஒன்றை நடத்தி மக்களின் தீர்ப்பைக் கோரவேண்டுமென்று கட்சியிலுள்ள ஒரு பிரிவினர் விரும்புவதாக மைசூர் மாநில இந்திராகாங்கிரஸ்கட்சியின் தலைவர் திரு. சித்த வீரப்பா தெரிவித்துள்ளார்

நேற்று நடைபெற்ற கட்சியின் குழுக் கூட்டத்துக்கு 107 பேர் மாத்திரமே வந்திருந்தனர் என்றும் ஆனல் கட்சியில் 120 பேருக்குமே லிருக்கிறார்களென்றும் இன்னும் பலர் சேர்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டது. வீரேந்திர பாட்டீல் மந்திரி சபையில் இருந்த சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான திரு. ராஜையாவும் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

சட்டசபையில் தமது கட்சிக்கு வலுவான பெரும்பான்மை இருப்பதாகவும் ஆனல் ஜனநாயக முறைப்படி மக்களின் தீர்ப்பைக் கோருவதையே தாங்கள் விரும்புவதாகவும் திரு சித்தவீரப்பா தெரிவித்திருக்கிறார்

மாற்றுஅமைச்சை அமைப்பதா அல்லது இடைக்கால தேர்தல் நடத்தும்படி கோருவதா என்பது பற்றி இன்று கூடும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மத்திய சபை முடிவுசெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

### பாட்டீல் விளக்கம்

மனச்சாட்சியின் படியே தமது மந்திரிசபையின் ராஜினமாவை சமர்ப்பித்ததாக திரு. வீரேந்திர பாட்டீல் அறிவித்திருக்கிறார்.

தமது மந்திரிசபையின் ராஜினமா பற்றி திரு நிஜலிங்கப்பாவுடன் தாம் கலக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். தனித்து இயங்குவதா அல்லது இந்திரா காந்தி காங்கிரசுடன் சேர்ந்து கொள்வதா என்பது பற்றிக் கட்சி முடிவெடுக்கும் என்றும் அதன்படி தாம் நடக்கப்போவதாகவும் திரு பாட்டீல் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் கொள்கைகளிலும், லட்சியங்களிலும் எப்பொழுதுமே தமக்கு கருத்து முரண்பாடு இருந்ததில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### மத்தியப் பிரதேசத்தில் இன்னுமொரு மந்திரி ராஜினமா

மத்தியப் பிரதேசத்தில் சம்யுக்த விதாயத்தளத்தில் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி மந்திரியாகவிருந்த திரு. ஷெரீலானி என்பவரும் ராஜினமாச் செய்யப்போவதாக அறிவித்துள்ளார் ஏற்கனவே இவ்வாறு சில மந்திரிகள் இந்த அமைச்சரவையிலிருந்து விலகியிருக்கிறார்கள்

மத்தியப் பிரதே முதலமைச்சர் திரு வி ரி சிங் தம்மைப் பதவியிலிருந்து விடுவிக்குமாறு விடுத்த கோரிக்கையை சம்யுக்த விதாயக்தளம் நிராகரித்துவிட்டது

இந்திய லோகசபைஇன்று கூடுகிறது. இன்று புதிய எம். பி.க்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள் திங்கட்கிழமையன்று புதிய சபாநாயகர் தெரிவுசெய்யப்படுவார்

கொடியை அகற்ற மறுத்தவர் மீது

## சிப்பாய் சுட்டதால் கி.பாக்கில் கொந்தளிப்பு

### ஷேக்கை மீண்டும் யாஹ்யா சந்திக்கிறார்

டாக்கா, மார்ச் 19

கறுப்புக்கொடி கட்டிய ஒருவர்மீது சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதால் நேற்று கிழக்கு பாகிஸ்தானில் கொந்தளிப்பான நிலைமையொன்று உருவாகியது.

திரு. முஜிபுர் ரஹ்மானின் சட்டமறுப்பு இயக்கத்துக்கு சார்பாகவும் சமீபத்தில் ஏற்பட்ட வன்முறைகளில் பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாகவும் கறுப்புக்கொடியொன்றை ஒருவர் நாட்டினர். அதனை அப்புறப்படுத்தும்படி சிப்பாய்கள் கோரியபோதிலும் அவர் அதற்கு மறுத்துவிட்டார் அதனல் அவர்மீது சிப்பாய்துப்பாக்கியால்சுட்டு காயமேற்படுத்தினர்.

இதனல் கொதிப்படைந்த மக்கள் தெருக்களில்கூடி ஆர்ப்பாட்டம் நடாத்தினர்கள். ஷேக் முஜிபுர் ரஹ்மானின் வீட்டுக்குச்செல்லும் வழிகளையெல்லாம் மக்கள் அடைத்துக்கொண்டார்கள் இதுபற்றி தாம் கவனிப்பதாக ஷேக்முஜிபுர் ரஹ்மான் மக்களுக்கு வாக்குறுதியளித்தார்.

### மீண்டும் சந்திப்பு

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசமைப்பு நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் ஜெனரல் யாஹ்யாகான் இன்று மீண்டும் அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

அதேசமயம் மேற்கு பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் திரு சுல்பிகார் அலி பூட்டோ தாம் டாக்காசெல்வதனல் பயன் ஏதுமிருக்காதென்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

ஜெனரல் யாஹ்யாகானிடமிருந்து தாம் சில விளக்கங்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் அவை கிடைத்த பின்னர் டாக்கா செல்வது பற்றி முடிவு செய்யப்படுமெனவும் நிருபர்களிடம் கூறினர். தாம் டாக்கா செல்வதால் தேசிய சட்டசபை கூடவிருக்கும் 25-ந் திகதிக்கு முன்ஏதும் பயனிருக்கும் என்றால் மாத்திரமே அங்கு போவார் என்றும் அவர் சொன்னர்.

மெக்ஸிக்கோவில்

## 5 சோவியத் அதிகாரிகளுக்கு வெளியேற உத்தரவு

மெக்சிக்கோநகர் மார்ச்.19

மெக்ஸிக்கோவிலுள்ள சோவியத் தூதரக அதிகாரிகள்5பேர் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். தூதரகத்தின் பொறுப்பதிகாரியும் இவர்களில் ஒருவர்.

மாஸ்கோவிலுள்ளமெக்ஸிக்கோ தூதுவரும் திருப்பியழைக்கப்பட்டிருக்கிறார்; மாஸ்கோவில் பயின்றமெக்ஸிக்கோ இளைஞர்கள் சிலர்புரட்சிநடவடிக்கைகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## கி.ச தலைவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

வயல்வெளிப்புறத்திலமைந்துள்ள சண்டிலிப்பாய் மயானத்திற்கு பாதையில்லாததால் வயல் வரம்புகளினல்தான் இங்கு பிரேதங்களை எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறதென்றும் எனவே மயானத்திற்குசெல்வதற்கு வசதியாக பெரியார்களின் உதவியுடன் பாதை எடுக்குமாறும் மானிப்பாய் கிராமசபைத் தலைவரை ஊர் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

## கி. பாக். நிலைமை பற்றி ஆராய கமிஷன்

டாக்கா, மார்ச் 19

கிழக்குப் பாகிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட சம்பவங்களின்போது ராணுவம் சுட்டதாலும் வேறு பல காரணங்களாலும் பலர் இறக்க நேர்ந்தது குறித்து விசாரணை நடத்த பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டிருக்கின்றது.

அதிபர் யாஹ்யாக்கான் அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானை இரண்டாவது தடவையாக சந்தித்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

யாஹ்யாக்கானின இந்த நடவடிக்கை ஷேக் முஜிபுர் ரஹ்மானின் கோரிக்கை ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பாதைக் காட்டுவதாக நிருபர்கள் தெரிவித்தனர்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் தமது இல்லத்தின் முன் கூடியிருந்த ஏராளமான மக்களின் முன் பேசுகையில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் நீதிக்காகப் போராடுகிறார்கள். இந்தலட்சியம் நிறைவேறும் வரை போராட்டம் ஓயப்போவதில்லையென்றார். அதற்காக எந்தவிதமான தியாகத்துக்கும் தயாராய் இருக்கும்படி அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

## உத்தியோக பற்றற்ற பார்வையாளர்

வேலணை, வெள்ளி

புங்குடுதீவு வைத்தியசாலையின் உத்தியோகப் பற்றற்ற பார்வையாளராக திரு க. தில்லைநாதன் நியமிக்கப்பட்டிருக்கிறார். திரு. கா. பொ. இரத்தினம் எம். பி.யின் சிபார்சின் பேரிலேயே இந்நியமனம் நடைபெற்றது.



கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

* மணிக்கு 10,000 கலன்
* குறைந்த இயக்கச் செலவு
* பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்குவமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனித சமுதாயத்திடையே பெருந்தன்மை, கருணை தூய்மை, சாந்தம் ஆகிய குணங்களை நாம் வளர்த்துக்கொண்டோமானால் நாடு சுபிட்சமடையும். நாமும் மகிழ்ச்சியோடு வாழ்வோம்.

— விவேகானந்தர்.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 6ந் திகதி (20-3-71)

## பதுக்கல் தடுப்பும் சுய தேவைப் பூர்த்தியும்

மா, சீனி, மிளகாய், உப்பு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு உண்மையில் தட்டுப்பாடு இல்லையென்றும் வேண்டுமென்றே இப்பொருள்களைப் பதுக்கிவைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளனரென்று நிதி அமைச்சரும் மற்றும் பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் பலரும் தெரிவித்துள்ளனர். ஒரு வருடத்துக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சேமித்துவைக்கப்பட்டுள்ளதென்றும் இப்போது இப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு சில சக்திகளின் தேசத் துரோக நடவடிக்கைகளே காரணமென்றும் கூறுகிறார்கள் இக் கூற்றில் உண்மையில்லையென்று கூறமுடியாது.

பதுக்கல், கொள்ளைலாபம் ஆகியவைகளைத் தடுப்பதற்கு இன்றைய அரசாங்கம் மட்டுமல்ல முந்தைய அரசாங்கங்களும் பெருமுயற்சி எடுத்து வந்திருக்கின்றன விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள் பொலிஸ், இராணுவ மற்றும் சாதாரண அரசாங்க ஊழியருக்குக் கூட வழங்கப்பட்டது. திடீர்ச் சோதனைகள், பதுக்கல் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலேயே அப் பொருள்களை பகிரங்கமாக விற்பனைசெய்வது போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன கொள்ளைலாபம் அடித்தவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்குப் பெருந்தொகைப் பணம் அபராதமும் விதிக்கப்பட்டது ஆயினும் பதுக்கலும் கொள்ளை லாபமும் நின்றதாகவும் இல்லை; குறைந்ததாகவும் தெரியவில்லை.

இன்றைய அரசாங்கம் பதுக்கல், கொள்ளைலாபத்துக்குக் கடும் தண்டனை விதிப்பதற்கான சட்டங்களைக் கொண்டு வரவிருக்கிறது. இதுவரை இச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அபராதம் தான் விதிக்கப்பட்டு வந்தது. அபராதமும் அப்பாவிகளின் தலையில்தான் விழுவது வழக்கம் பெரும் முதலைகள் தப்பிவிடுவர். இனி அபராதத்துடன் சிறைத் தண்டனையும் விதிக்கப்படவிருக்கிறதால் சிப்பந்திகளை மாட்டிவிட்டு பெருச்சாளிகள் தப்புவதற்கு வழியிருக்கக் கூடாது.

இதுதவிர சீனி, மா போன்ற அத்தியாவசிய உப உணவுப் பொருள்களையும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனமே இறக்குமதி செய்கிறது இந்த நிறுவனக் கிளைகள் மூலமும் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலமும் இவை கட்டுப்பாட்டு விலையில் பங்கீட்டு முறையில் விற்பனை செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டால் பதுக்கலுக்கு இடமிருக்க முடியாது.

சீனித் தொழிற்சாலைகள் இரண்டு நம் நாட்டிலிருக்கின்றன. அவை சீனியைத் தவிர உபபொருள்களையே பெரிதும் உற்பத்திசெய்வதாகத் தெரிகிறது. இத் தொழிற்சாலைகளில் சீனி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன் பனங்களிலிருந்து சீனி உற்பத்தி செய்வதற்கான முயற்சியையும் துரிதமாக மேற்கொள்ளவேண்டும். தமிழ்நாட்டில் இது ஓரளவு வெற்றியளித்திருப்பதால் தமிழ்நாட்டின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவது கடினமல்ல.

கோதுமை மாவுக்காக வெளிநாடுகளை எதிர்பார்த்திராமல் உடலுக்கு மிக நல்லதாகக் கருதப்படும், நம் முன்னோர்கள் உபயோகித்து திடகாத்திரமாக வாழ்ந்ததற்குப் பெரிதும் காரணமாக இருந்த சாமை, தினை, வரகு போன்ற உப உணவு உற்பத்திக்கு ஊக்கமும் உதவியுமளிப்பது அதிக பயன்தரும்.

பெட்ரோலியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது நம்நாட்டில் எண்ணெய் படிவங்கள் இருப்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதால் சோஷலிச அரசுகளின் உதவியுடன் எண்ணெய் எடுக்கு முயற்சியைத் துரிதப்படுத்தலாம்.

இயந்திர சாதனங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன, அயல்நாடான இந்தியாவில் இயந்திரசாதன உற்பத்தி நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. பண்டமாற்று முறையில் இந்தியாவிடமிருந்து இச் சாதனங்களைப் பெறுவதும் கஷ்டமல்ல.

இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் வெளிவல்லரசுகளின் தயவையோ, கப்பல் கட்டண உயர்வு, பாவனைப்பொருள் வந்து சேர்வதில் மேற்கொள்ளப்படும் தாமதம் ஆகியவை பற்றியோ அஞ்ச வேண்டிய அவசியமே இராது

## மீண்டும் சந்தித்து பேசினர் முஷிபுரும் 'யாஹ்யா'வும்!

டாக்கா, மார்ச் 19

தேசிய அவாமி லீக் தலைவர் திரு முஷிபுர் ரஹ்மானும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகானும் மீண்டும் இன்று சந்தித்துப் பேசினர். இவர்களது பேச்சுவார்த்தை 90 நிமிடம் நீடித்ததாக டாக்கா வானொலி தெரிவித்தது

இவர்களது பேச்சுவார்த்தையின்போது உதவியாளர்கள் எவரும் இருக்கவில்லை மீண்டும் இவர்கள் சந்தித்துப் பேசவிருப்பதாக அறிவிக்கப்பட்டது

சமீபத்தில் சிட்டஹாங்கில் நடந்த கலவரங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்குத் தமது சார்பில் மூவரை திரு முஷிபுர் ரஹ்மான் சிட்டாங்கில் அனுப்பி வைத்துள்ளார்

# இன்புளுவன்சா ஏற்பட்டால்....

— வி. பி. திரியு பனேவா —

[புதுடில்லி கலாவதி சரண் சிறுவர் மருத்துவ மனையில் சோவியத் செஞ்சிலுவை சங்கமும், செம்பிறை சங்கமும் நடத்தும் குழந்தைகள் நோய் ஆராய்ச்சிக் கேந்திரத்தைச் சேர்ந்தவர் கட்டுரையாளர் ]

இன்புளுவன்சா ஒரு தொற்று நோய் ஒருவகை வைரசால் இது ஏற்படுகிறது. இன்புளுவன்சா வைரஸ் வெளியிடும் நச்சு நரம்பு மண்டலம், இருதயம், நுரையீரல்கள் ரத்த நாளங்கள் ஆகியவற்றைப் பாதிக்கிறது. இன்புளுவன்சா வைரஸ் குறைந்த வெப்பத்தைத் தாக்குப்பிடித்து நிற்கக் கூடியது. ஆனால் வெப்பம் 60 டிகிரி சென்டிகிரேடுக்கு உயர்ந்தாலோ அல்லது தொற்றுத்தடை மருந்து தெளித்தாலோ அது விரைவில் அழிந்துவிடும்.

நோய்வாய்ப்பட்ட அல்லது குணமடைந்து வருகிறவரால் தொற்று ஏற்படுகிறது. அவர்பேசும்போதும், இருமும்போதும், தும்மும் போதும். அதேபோல்நோயாளியுடனோ அல்லது அவர் பயன்படுத்தும் பொருள்களுடனோ நேரடித் தொடர்பு ஏற்படும்போதும் நோய் பரவுகிறது. குளிரும் பற்றுக்குறையான உணவும் இந்நோயைத் தீவிரப் படுத்துகின்றன. இன்புளுவன்சா அங்குமிங்குமாக பரவுவதோடு நில்லாமல் சமயங்களில் பெருவாரி நோயாகவும் மாறக்கூடும்.

39-40 டிகிரி சென்டிகிரேட் வரை காய்ச்சல் அடித்தல், தொந்தரவு அளிக்கும் வரட்சி இருமல், கடுமையான தலைவலி, உடம்பு வலி, முக்கியமாக இடுப்பு வலி, கண்களிலும் கண் இமைகளுக்குக் கீழும் வலி ஆகியவை இந்த நோயின் அறிகுறிகளாகும். இதல்லாமல் நோயாளியின் தொண்டையும் மூக்கும் சவ்வுப் படலமும் சிவப்பாகி விடுகின்றன. மூக்குத் துவாரங்கள் அடைத்துக் கொள்கின்றன. நோயாளி வெளிறிப் போய்காணப்படுகிறார் சமயங்களில் மூக்கிலிருந்து ரத்தம் வடிவதும் உண்டு நாடி அழுத்தம் குறைகிறது. சிறுநீர் கழிவதும் குறைகிறது. மூச்சுக்குழலில் கோளாறுகள் தோன்றுகின்றன. சிறு குழந்தைகளுக்கு இந்தக்குறிகளுடன் வயிற்றுப் போக்கு நேரிடுவதும் உண்டு கடுமையான காய்ச்சல் மூன்று நான்கு நாட்கள் வரை நீடிக்கும். அதன் பின்னர் படிப்படியாக இறங்கும்.

காய்ச்சல் நீடிக்கும் வரை நோயாளி படுக்கையிலேயே இருக்கவேண்டும். திரவபதார்த்தங்களை ஏராளமாகச் சாப்பிடவேண்டும் முக்கியமாக எலுமிச்சம்பழச்சாறு கலந்து தேநீர் அருந்துவது நல்லது உடலை வெதுவெதுப்பாக வைத்திருப்பதுடன், காய்ச்சலை மட்டுப்படுத்த மருந்துகள் சாப்பிடவேண்டும். வைட்டமின்கள் சாப்பிடவேண்டும்.

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நோய் கண்ட முதல் இரண்டு நாட்களில் இன்புளுவன்சா எதிர்ப்பு கம்மாகுளோபுலின் தரலாம். அன்ரிபயோட்டிக் மருந்துகளோ சல்பாமைட் மருந்துகளோ இன்புளுயன்சா வைரஸை அவ்வளவாகக் கட்டுப்படுத்தமாட்டா ஆனாலும் இன்புளுவன்சாவுடன் இதர தொற்று நோய்களும் தோன்றக் கூடுமாதலால் இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இந்த மருந்துகளைத் தரலாம். நோயின் கடுமையான அறிகுறிகள் முற்றிலுமாக மறையும் வரை உலர்ந்த இன்புளுவன்சா எதிர்ப்பு வக்ஸீனை மூக்குக்குள் ஊதுவதும் நல்ல பலனளிக்கும்.

இன்புளுயன்சா முற்றி சமயங்களில் நிமோனியா ஏற்படுவதும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் பென்சிலின் ஸ்ட்ரெப்டோமைசின் போன்ற மருந்துகள் கொடுக்கலாம். இன்புளுவன்சாவால் அடிநா வறட்சி, காதுநோய்கள், நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்ட இதர பல வியாதிகள் தோன்றக்கூடும்.

# ஈழத்தின் சமயக்க[...]

## "சிவாகம ஞான பானு" அ[...]

## சிவஸ்ரீ குமாரசாமிக்கு[...]

ஈழத்தின் தவப் பயனாய் சைவ நன்மக்களின் புண்ணியத்தின் பேறாக 85 ஆண்டுகளுக்குமுன் அவதரித்தவர் அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள்.

பெருமைமிக்க ஊர்களில் பிறந்தனால் சிலர் பெருமை பெறுவர். ஆனால் எங்கள் குருக்களின் பிறப்பால் அச்சுவேலிக் கிராமமே பெருமைக்குள்ளானது. 1886ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ம் தேதி ஜனனமான குருக்கள் உரிய வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்றார். நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதரிடம் ஆரியமும் செந்தமிழும்கற்றுணர்ந்தார். வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகளிடமும், புலோலி முத்துக்குமாரசுவாமிக் குருக்களிடமும் பயின்று தமது ஐயங்களைத் தெளிவாகப் போக்கிக் கொண்டார்

இந்த நூற்றாண்டின் இணையற்ற பேரறிஞர்களில் இவரும் ஒருவர் பத்துக்கு மேற்பட்ட சமஸ்கிருத நூல்களையும் இருபதுக்கு மேற்பட்ட தமிழ் சமய நூல்களையும் எழுதியுள்ளார். இவை நமக்குக் கலங்கரை விளக்கம் போன்றன. சமய வாழ்வு வாழ்க்கூடிய வகையில் அவரது நூல்கள் அமைந்துள்ளன.

ஆகமங்கள் அருகிவரும் இந்நாளில் அவற்றை நன்கு ஆராய்ந்து சிவாகம சேகரம், சிவலிங்கப் பிரதிஷ்டா விதி ஆகிய நூல்களை நமக்கு ஆக்கித்தந்தார். இன்றுள்ளோர் எவ்வித சிரமமும் இன்றி கிரியைகளைச் செய்யக் கூடிய முறையில் கிரியைகளை விளக்கியும், அதற்கான மந்திரங்களையும் அழகாக பயில அவர் உதவினார் இந்த நூல்கள் ஆதி சைவ குருமாருக்குக் கிடைத்த வரப் பிரசாதமாகும்

ஈழத் திருநாட்டில் மட்டும் அல்ல தமிழ் நாட்டிலும் அவர் புகழ் பரவியிருந்தது. அவரது சமஸ்கிருத தமிழ் நூல்களுக்குத் தமிழ் நாட்டில் பரவியிருந்தது. அவரது சமஸ்கிருத தமிழ் நூல்களுக்குத் தமிழ்நாட்டில் தருந்த கிடைத்த பாராட்டுரைகள் இதற்குச் சான்றுகளாகும்.

நமது குருக்களின் பேரறிவை அவரது ஆற்றலை வியந்து பாராட்டியவர்களில் சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் தருமை ஆதீனம் உ வச்சிரவேல் முதலியார் இலக்கணம் முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் ஆகிய தமிழகத்துப் பேரறிஞர்களும் மகாவித்துவான் சி கணேசையர் போன்ற ஈழத்துப் பெருமக்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

### சந்தேகம் போக்குவதில் வல்லவர்

ஆகமநூல்களை ஆராய்ந்து அச்சிடுவதில் ஆற்றல் வாய்ந்த இவர் இவைசம்பந்தமான சந்தேகங்களைப் போக்குவதில் வல்லவர். எவராயினும் தமது சந்தேகம் கேட்கப் போனால் அவரது தகுதி நோக்காது அவர் சந்தேகம் தீரக்கூடிய வகையில் விளக்கம் கொடுக்கக்கூடியவர். சந்தேகங்களைப்போக்குவதில் எவ்வளவு ஆற்றல் உண்டோ அதுபோல்சைவத்துக்கு மாறான கருத்துக்களை எவர் சொன்னாலும் அவற்றை தக்க ஆதாரங்களுடன் கண்டித்து நிரூபித்துக் கொள்வார். இது அவருக்கு கைவந்தகலை.

அத்தியாவசிய பொ[...]

# வீட்டிலும்[...] வைக்க க[...]

கோட்டை, வெள்ளி[...] வீட்டில் சேமித்து வைக்[...]கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

இக்கட்டுப்பாட்டினால் ஒவ்வொரு [...]டும்பத்தி[...] ஒரு கிழமைக்குத் தேவை[...]யான கோதுமைமா சீ[...] ஆகியவற்றை வைத்திருக்[...]கலாம். மற்றும் மல்லி சின்ன வெங்காயம், பம்பாய் வெ[...] காயம், கடலை, துவர[...] பருப்பு, உழுந்து, உள்ளி நற்சீரகம், பயறு பா[...] உணவு முதலியவற்றை [...]நாலு கிழமைக்குத் தக்க[...]கவே வைத்திருக்கலாம்

நேற்று முன்தினம் வெ[...]யான அரசாங்க விசே[...] வர்த்தமானியில் மேற்[...]வாறு விதிக்கப்பட்டுள்ள[...] அவசரகால திட்டத்தி[...]

## கச்சதீவுக்கு யாத்திரீகர் படையெடுப்பு!

### 7 ஆயிரம் ரூபாய் நகை; இந்திய கரன்ஸி நோட்டுக்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், சனி

கச்சதீவு அர்ச். அந்தோனியார் உற்சவத்திற்காக யாத்திரீகர்கள் பெருமளவில் அங்கு செல்லத் தொடங்கியிருக்கிறார்கள். கரையூர்த் துறைமுகத்திலிருந்து வியாழக்கிழமை அதிகாலை முதலே புறப்பட்டுச் சென்றனர்.

கச்சதீவு யாத்திரீகர்கள் நீண்ட கியூவில் கடும் வெய்யிலில் காத்துநின்றனர் இம்முறை சுங்கப் பகுதியினரும், பொலிஸாரும் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டனர்.

பிரயாணி ஒருவர் தனது தொடையில் ஏழாயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை மறைத்துக் கொண்டு செல்வது கண்டு பிடிக்கப்பட்டு அந்த நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன மற்றொருவர் ஆயிரம் ரூபாய் இந்தியக் கரன்சி நோட்டுகளை கொண்டுசெல்[...] கண்டுபிடிக்கப்பட்டது. இவை தவிர [...] யாத்திரீகர்[...]

மான தேங்காய் எண்ணெய் டின்கள், ஹோர்லிக்ஸ்போத்தல்கள், பிஸ்கட்டுகள், டோர்ச் லைட்டுகள் என்பனவும் கொண்டு செல்கின்றவர் அளவுக்கு அதிகமாக இப்பொருட்களை எடுத்துச் செல்வோரிடமிருந்து அவை பறிமுதல் செய்யப்படுகின்றன.

கச்சதீவு செல்வதற்காகத் தென்னிலங்கையிலிருந்து நேற்றும் புகையிரத மார்க்கமாக ஏராளமானோர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வழமையைவிட இம்முறை வள்ளச் சொந்தக்காரர்கள் கூடுதலான கட்டணத்தை அறவிடுகின்றனர் என்று யாத்திரீகர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

— —

### தேனீர்விலை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவில் ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாடு காரணமாகத் தேநீரின் [...] கடைக்காரர் அதிகரித்துள்ளனர்.

### பொங்கல் விழா

கண்டாவளை, வெள்ளி

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் பொங்கல்விழா அடுத்த மாதம் 9-ம் திகதி நடைபெறவுள்ளது

இதற்கான ஏற்பாட்டை கிளிநொச்சி எம் பி திரு. வீ ஆனந்தசங்கரியும் மற்ற விழாக்குழுவினரும் விரிவாக செய்துவருகின்றனர்.

அடியார்களுக்காகபோக்குவரத்துச்சபையும் இங்குள்ள தனியார் வாகனங்களும், இவ்வருடம் கூடுதலான சேவை ஒழுங்குகள் செய்துள்ளன.

......

### இலவசவகுப்பு

வட்டுக்கோட்டை, வெள்ளி

சித்தன்கேணி சிவச்செல்வி கலாமன்றத்தினர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இலவசக்கலை வகுப்புகளை நடாத்திவருகின்றனர் போயாதினத்திலும் முதல் நாளும் நடைபெறும் இவ்வகுப்புகளில் சமயம் சங்கீதம், நடனம், வயலின் ஆகியவை போதிக்கப்படுகின்றன.

## கைக்குண்டு[...] இனி 12 வ[...]

கோட்டை, வெள்[...]

கைக்குண்டு வைத்திருப்[...]வர்கள் கைக்குண்டு உ[...]பத்தி செய்பவர்கள் மீ[...] அரசாங்கம் கடும் நடவ[...]கையெடுக்கவிருக்கிறது.

மேற்படி குற்றங்களுக்கு தற்போது இது காலவ[...] விதிக்கப்பட்டுவந்த 5 வரு[...] சிறைத்தண்டனை 12 வரு[...]மாக அதிகரிக்கப்படுமெ[...] அதிகாரபூர்வமான வட்[...]ரங்கள் தெரிவித்துள்ளன

கைக்குண்டுகளை வைத்திருப்பதற்கும் அவற்றை உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிப்பவர்களுக்கு மேற்[...] தண்டனையே கிடைக்[...] எனவும் மேற்படி வட்[...]ரங்கள் தெரிவித்துள்ளன

சமீபத்தில் ஏசலமு[...] பகுதியில் கைக்குண்டு [...] பத்தியில் ஈடுபட்டிருக்[...] பொழுது விபத்துக்குள்ளா[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மயக்கருவூலம்

## ...ஈ பானு" அச்சுவேலி

## ...மாரசாமிக்குருக்கள்

... குருக்களின் பேர ... அவரது ஆற்றலை ... பாராட்டியவர்க ... சிவஸ்ரீ ஈசான சிவாச் ...ார் ஒருமை ஆதீனம் ...சிரவேல் முதலியார் ...ணம் முத்துக்குமார ...சித்தம்பிரான் சுவாமி ... ஆகிய தமிழகத்துப் ...ஞர்களும் மகாவித்து ... சி கணேசையர் ...ற ஈழத்துப் பெருமக் ... குறிப்பிடத்தக்கவர்

...தகம்

...க்குவதில்

...வர்

...ம நூல்களை ஆராய்ந்து ...டுவதில் ஆற்றல் வாய் ...இவர் இவைசம்பந்த ... சந்தேகங்களைப் போக் ...ல் வல்லவர். எவராயி ...மது சந்தேகம் கேட் ...பானுல் அவரது தகுதி ...ாது அவர் சந்தேகம் ...கூடிய வகையில் விளக் ... கொடுக்கக்கூடியவர். ...ங்களைப்போக்கு வ ... எவ்வளவு ஆற்றல் ...டா அதுபோல்சைவதி ... மாருன கருத்துக்களை ... சொன்னாலும் அவ ... தக ஆதாரங்களு ...கண்டு ... நிரூபிக்கும் ...வார். இது அவருக்கு ...ந்தகாலை.

சிவப் பொலிவும், முப் போதும் திருமேனி தீண்டும் முத்திச் செல்வரான நமது குருக்கள் தென்பால் உகந் தாடும். தில்லைக் கூத்தன் அபிடேக தினமான மாசி மகத்தன்று மரண பயம் நீக் கிப் பிறவிப் பெருங்கடலைக் கடந்தார்.

தமது வாழ்வின் இறுதி வரை அவன் நாமம் மற வாது அஞ்செழுத்து ஓதி அரனடி சேர்ந்த அவரது பிரிவு நமக்கு ஈடுசெய்யமுடி யாத பேரிழப்பு. சைவசமூ கம் குறிப்பாக சிவாச்சாரி யர்கள் தமது தன்னிகரற்ற தலைமையை இழந்துவிட்ட னர். குருக்கள் ஆக்கிய நூல் கள் எக்காலத்திற்கும் அவர் நினைவை நிலைக்கச்செய்யும். கச டறக் கற்ருர்; கற்றவழி ஒழுகினர்; வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துகாட் டினர். உலகு இன்புறக் கண்டு தாம் இன்புற்ருர் இத்தகைய சீர்மிகு எங்கள் குருக்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரது நூல் கள், அவர்காட்டிய வழிகள் நமக்கு என்றும் துணையாக இருக்கும். அவர் ஆத்ம சாந்திபெற நாம் அனுதின மும் அவர் வழிபட்ட தில்லைக்கூத்தனை வேண்டு தல் செய்வோம்

—நயினை: என் எஸ் பரமேஸ்வரக்குருக்கள்

## 'ஒரே விதமான கல்வி அளிக்கப் படவேண்டும்'

யாழ்ப்பாணம்,வெள்ளி

இன்றுள்ள கல்விமுறை யால் சகல மாணவரும்ஒரே விதமான கல்வியைப் பெற முடியாது இருக்கின்றனர் கிராமப்புறப் பாடசாலை களுக்கு ஒருவிதமான கல்வி யும் நகர்ப்புறப் பாடசாலை களுக்கு ஒருவிதமான கல்வி யும் அளிக்கப்படுவதால் மாணவர்களைஒரே சமநிலைப் படுத்தமுடியாது இருக் கிறது.

இவ்வாறு யாழ் மலாயா கபே மேல்மாடியில் சங்கத் தலைவர் திரு எஸ். செல் லையா தலைமையில் நடந்த அகில இலங்கை சுவீகரிக்கப் பட்டதமிழ் ஆசிரிய சங் கம் கூட்டிய விசேட கூட் டத்தில் அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் கல்வி ஆலோசகர் திரு ஏ வைத்தி லிங்கம் பேசுகையில் மேற் கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகை யில் கூறியதாவது:

### பெரும் பிரச்னைகள்

இன்று கல்வித் துறையில் பெரும் பிரச்னைகள் நிறைந் துள்ளன.

தாழ்த்தப்பட்ட மாணவர் கள் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் உயர்சாதி ஆசிரியர்கள் அவர்களுக்குநல் லமுறையில்படிப்பிப்பதில்லை என்று குறைகூறப்படுகிறது.

கிராமப்புறத்தில் குடிதண் ணீர் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் இல்லாத பாட சாலைகளுக்கு உதவாமல் நகர்ப்புறத்தில் பெரியபாட சாலைகளை இடித்து இன்னும் பெரிய பாடசாலையாக்கப் படுகிறது. இந்நிலை மாற்றப் படவேண்டும். சகலருக்கும் ஒரே விதமான கல்விபெறக் கூடியநிலையை ஏற்படுத்த வேண்டும்.

சாதிப்பிரச்னை ஆலயப்பிர வேசம் போன்ற பிரச்னைக்கு தீர்வுகாண கல்வித்துறை உதவவேண்டும்.

இடமாற்றசபை அங்கத் தவரும் தேசிய ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவரு மான திரு மாணிக்கவாசகர் பேசுகையில். 'கல்விநிலை அர சியல்வாதிகளின் கையில் அகப்பட்டு பாதிக்கப்பட் டுள்ளது. ஆசிரியர்கள் சேவை பாரம்பரியமானது. இப்படியான தொழிலை அர சியலுக்குச் செலுத்தி ஆசி ரிய தொழிலுக்கு மாசு ஏற் படுத்தக் கூடாது. ஆகவே அரசியலிலிருந்து ஆசிரியர் கள் விலகி ஒன்று சேர்ந்து செயலாற்ற வேண்டும் என் ருர்.'

மற்றும்பலர் உரையாற்றி னர். (ஈ வி நி)

ஆசிரியருக்கு கடிதம்

# தி.மு.கழக வெற்றிக்கு காரணம் என்ன?

இரு நாட்களுக்குமுன் உங் கள் பத்திரிகையில் வெளி யான ஓர் கடிதத்தைப்படித் துப்பார்த்தேன்

அவ்வெழுத்தாளரின் அபிப்பிராயப்படி பின்வரும் காரணங்களே தி.மு கழ கத்திற்கு அமோக வெற் றியை அளித்ததென்பதே

முதலாவது சென்னை மாகாணமென்பதை தமிழ் நாடு என்னும் நாமமாக மாற்றியது.

இரண்டாவது தமிழ் மொழி மூலமே மாணவர் கட்கு கல்வி கற்பிக்கவேண் டுமென்ற தீர்மானத்தைச் செய்தது

மூன்ருவது - இந்தி, அரச கரும மொழியாய் வராமல் தடுத்தது.

நான்காவது - இந்திய அர சியல் அமைப்பு சமஷ்டி அடிப்படையாயிருப்பது.

யான் 12-3-71-ல் வெளி யான சென்னையில் பிரசுர மாகும். 'இந்து' பத்திரிகை யின் தலையங்கத்தை கூர்மை யாகப்படித்துப் பார்த்தேன். அகில இந்தியாவிலும் திரு மதி இந்திரா பெற்ற வெற் றியைப் பற்றித்தான் முக் கிய ஆராய்ச்சிசெய்யப்பட் டிருக்கிறது தலையங்கத்தின் பிற்பகுதியில் இறுதியில் தி. மு. க. வெற்றியின் கார ணங்கள், நான் கூறும் ஒழுங் கில் அப்பத்திராதிபர் கூறி யிருக்கிருர்.

முதலாவது - தொடர்ந்து நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்த தி மு க ஆட்சியா ளர் மக்களுக்குக் குறை விலாது உணவுப்பண்டங்கள் கிடைக்கச்செய்தார்கள்.

இரண்டாவது - தங்கள் கட்சியின் கட்டுக்கோப்பை அடி அத்திவாரத்திலிருந்து ஸ்திரமாக்கினுர்கள்.

மூன்ருவது - திருமதி இந்திராகாந்தியின் மத்திய அரசாங்கத்தோடு இணைந்து அன்னியோன்னியமான தொடர்புகொண்டார்கள்.

உங்கட்குக்கடிதம் அனுப் பிய நண்பரில் பிழைபிடிக் கும் நோக்கமாக இக்கடி தத்தை யான் வரையவில்லை.

அத்துடன் திருவாளர் அருணம்பலம் அங்கம் வகிக் கும் தமிழ்க்காங்கிரஸ் அங் கத்தவனுமல்ல யான். ஆயி னும், திரு அருணம்பலம் கூறியதும 'இந்து' பத்தி ராதிபரின்கருத்தும்இணைந்து போவதைக் காணுகிருேம்.

நாங்கள் நான்பட்ட மனப் பாசங்களை, உணர்ச்சிவேகங் களைக் கூர்மைப்படுத்துவதை கைவிட்டு ஆசியாவின் பெரும்பான்மை நாடுகள் கைக்கொள்ளும் சோஷலிச கொள்கையையும் முக்கிய மாய் சர்வதேசப் புரட்சி கரப் பாதையையும் எங்கள் நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கி அவர்களையும் சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் முன்னேறச் செய் வதே கடமையென யான் தாழ்மையாகக் கூற விரும்பு கின்றேன்.

மேலும் 'இந்து' பத்திரிகை ஓர்சோஷலிச வெளியீடல்ல. ஆனல் இன்றைய இந்தியா வில் மாற்றங்களைக் கணிக்கக் கூடிய தகைமை வாய்ந்தது. உங்களுக்கு கடிதம் அனுப் பியவரின் காரணமொன்ரு வது அப்பத்திரிகையின் தலை யங்கத்தில் எடுத்தாளப்பட வில்லையென்பது குறிப்பாக நோக்கவேண்டியது.

இலங்கைத்தமிழர் ஆகிய நாம் எழுத வாசிக்கக்கூடிய கல்வியில் இந்தியத் தமிழரி லும் பார்க்க மேம்பட்டவ ராயிருக்கலாம். ஆனல், இந்தியத் தமிழர் தாங்கள் அனுபவ ரீதியாகப்பெற்ற கல்வியின் மூலம் இன்றைய உலகம் பொருளாதாரமே- உடையவர் இல்லாதவர் என்ற பாகுபாடு - அப் போராட்டத்தின் அடிப் படையாக வளர்ச்சியுறுகிற தென்ற சித்தாந்தத்தை பெற்றுவிட்டார்கள் என்பது கண்கூடாகத்தெரிகிறது.

"— அரவிந்தன்" உடுவில்.

...தியாவசிய பொருட்களை

# ...வீட்டிலும் சேமித்து வைக்க கட்டுப்பாடு!

கோட்டை, வெள்ளி ...ட்டில் சேமித்து வைக் ...அத்தியாவசிய உணவுப் ...ருட்களுக்கும் அரசாங் ...கட்டுப்பாடு விதித்துள் ...க்கட்டுப்பாட்டினுல் ஒவ் ...ரு ...டும்பத்தினரும் ...கிழமைக்குத் தேவை ... கோதுமைமா சீனி ...வற்றை வைத்திருக்க ... மற்றும் மல்லி சின்ன ...ெங்காயம், பம்பாய் வெங் ...ம், கடலை, துவரம் ...ப்பு, உழுந்து, உள்ளி, ...சீரகம், பயறு பால் ...வு முதலியவற்றை ... கிழமைக்குத் தக்கதா ... வைத்திருக்கலாம் ...நற்று முன்தினம் வெளி ... அரசாங்க விசேஷ ...தமானியில் மேற்கண்ட ... விதிக்கப்பட்டுள்ளது. ...ரசாலத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுத்துள் ளது

மேலும் இவ்விசேஷ வர்த் தமானியில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

பங்கீடுசெய்யும் உணவுப் பொருட்களை கட்டுப்பாட்டு விதிகளின் கீழ் விநியோகம் செய்பவர்கள் பங்கீட்டுக்குக் குறிக்கப்பட்டுள்ள அளவுக்கு அதிகமாக விநியோகிக்கக் கூடாது. பொதுமக்கள் தங் கள் தங்கள் பங்கீட்டுப் புத் தகங்கள் தவிர மற்றவர் களது பங்கீட்டுப் புத்தகங் களை வைத்திருக்கக்கூடாது. மேற்படி உணவுப் பொருட் களை விநியோகிப்பவர்கள் கட்டுப்பாட்டு விலையின்கீழ் தாம் கையிருப்பில் வைத்தி ருக்கும் பொருட்களை மக்க ளுக்கு மறுக்காது வழங்க வேண்டும்

# ...கைக்குண்டு தயாரித்தால் இனி 12 வருடம் உள்ளே!

கோட்டை, வெள்ளி ...கைக்குண்டு வைத்திருப்ப ...ன் கைக்குண்டு உற் ...தி செய்பவர்கள் மீது ...சாங்கம் கடும் நடவடிக் ...கையெடுக்கவிருக்கிறது. ...மேற்படி குற்றங்களுக்குத் ...போது இது காலவரை ...க்கப்பட்டுவந்த 5 வருட ...றததண்டனை 12 வருட ... அதிகரிக்கப்படுமென ...கார பூர்வமான வட்டா ...ள் தெரிவித்துள்ளன. ...கைக்குண்டுகளை வைத்தி ...ப்பதற்கும் அவற்றை உற் ...தி செய்வதற்கும் ஊக்கமளி ...ர்களுக்கு மேற்படி ...டனையே கிடைக்கும் ...வும் மேற்படி வட்டா ...ள் தெரிவித்துள்ளன. ...மீபத்தில் எசலமுல்ல ...தியில் கைக்குண்டு உற் ...தியில் ஈடுபட்டிருக்கும் ...ாழுது விபத்துக்குள்ளாகி 5 பேர் மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது. இதே வேளையில் நாட்டின் பல பகுதிகளில் அபாயத்தை விளைவிக்கத்தக்க ஆயுதங்கள் உற்பத்திசெய்வதும் சமீப காலமதில் கண்டுபிடிக்கப் பட்டது. இவற்றைத்தொட ர்ந்தே அரசாங்கம் மேற்படி கடும் நடவடிக்கையை எடுக் கத் தீர்மானித்துள்ளது

---

### மக்கள் வங்கி பொறுப்பேற்றது

முல்லைத்தீவு, வெள்ளி

அரசாங்க உத்தரவைத் தொடர்ந்து வவுனியாவி லும் முல்லைத்தீவிலும் இய ங்கிவந்த கூட்டுறவு வங்கி களை மக்கள் வங்கி பொறுப் பேற்றுள்ளது.

கைதடி கொலை முயற்சி வழக்கு

## 'எதிரி குற்றவாளியல்ல' ஜூரிசபையினர் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,சனி

கைதடி கொலைமுயற்சி வழக்கில் எதிரியான ஆறுமுகத்தான் செல்லன் ஆக் குற்றத்தை செய்தார் என்றும் அப்போது அவர் மனநிலைசரியாக இல்லாத தால் குற்றவாளியல்ல வென்றும் ஜூரிசபையினர் ஏகமனதாக தீர்ப்பளித் தனர் இதைத் தொடர் ந்து நீதியரசர் நீதிமந்திரி யின் உத்தரவு வரும்வரை எதிரியை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப உத்தரவிட்டார்.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியர சர் ஜி. ஜீ. வீரமந்திரி முன்னிலையில் நேற்று விசா ரணை செய்யப்பட்டது

இவ் வழக்கில் கைதடியில் 66-ம் ஆண்டு பெப்ரவரி 21-ம் தேதி ஆறுமுகத்தான் செல்லன் என்பவர் அவரது மருமகன் கந்தன் ஐயங் கனை கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயற்சித் ததாக குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் சி. ஆறுமுகம் அட்வகேட் ஈ.பூபாலனின் உதவியுடனும் புறக்டர் வி. யோகேஸ் வரனின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

எதிரிக்காக அரசாங்கத் தால் அட்வகேட் ஆர் சிவா கணேசன் நியமிக்கப்பட்டி ருந்தார்

காயமடைந்த கந்தன் ஐயங்கன் சாட்சியமளிக்கை யில் கூறியதாவது. எதிரி எங்களுடன் தான் இருந் தார் நான் அவரதுமகளை திருமணம் செய்தபின் அவர் சுகவீனமுற்ற வராக இருந்தார். அவருக்கு அடிக் கடி மூளைக் கோளாறுவருவ துண்டு சம்பவம் நடந்த போது நல்லாய் இருந்தார் நான் கலியாணம் முடித்த பின் எதிரி இருதடவை அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்கு சென்ருர் ஒரு தடவை 3 வருடமும் மற்றத்தடவை 1 வருடமும் அங்கொடையில் இருந்தார் ஆட்களுக்கு தாக்கிய படி யால் தான் அவர் அங் கொடைக்கு அனுப்பப்பட் டார். ஒரு தடவை ஒரு பெண்ணையும் ... தபால் சேவகர் ஒருவரை யும் தாக்கினர் திடீரென அவருக்கு வலி வருவதுண்டு அதன்பின் மாருட்டம்வரும் மாருட்டம் வந்ததும் அவ ரின் தம்பியார் அவரை சங்கிலியில் போடுவார். 3 அல்லது நான்கு சங்கிலியில் கட்டப் பட்டிருப்பார். நான் சின் னத்துரையுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது சம்ப வம் நடந்தது. நான் திரும ணம் செய்த நாள்முதல் எதிரி நிரந்தரமான ஒரு தொழிலில் இருக்கவில்லை

அட்வகேட் சி. ஆறுமுகம் குறுக்குவிசாரணை செய்த போது சாட்சி கூறியதாவது: வலிவந்ததும் எதிரி பக்திப் பாடல்கள் பாடுவார். அத ஞல் அவருக்கு மாருட்டம் வரும் என அறிந்துகொள் வோம். வலிவந்ததும், தேவா ரம் பாடுவார். கண்டபடி ஆட்களை பேசுவார்

எதிரியின் மகள் சின்னத் தங்கம் சாட்சியமளிக்கை யில் நான் கலியாணம் முடிக்கு முன்பே எதிரிக்கு மாருட்டம் இருந்ததென்று கூறினர்.

அங்கொடை மனநோயா ளர் ஆஸ்பத்திரியை சேர் ந்த டாக்டர் வி. சற்குண நாயகம், டாக்டர் ஆறு கம் சிற்றம்பலம் கான்ஸ்ர பிள் முருகுப்பிள்ளை கனக சபை ஆகியோரும் சாட்சிய மளித்தனர்.

அசைஸ் விசாரணை நாளை காலைவரை ஒத்திபோடப் பட்டுள்ளது.

### மிளகாய்ச் செய்கை பாதிப்பு

வேலணை, வெள்ளி

வேலணைப்பகுதியில் மிள காய்ச்செய்கையில் ஈடுபட்டி ருப்பவர்கள் தாம் எதிர் பார்த்த பலனை அனுபவிக்க முடியாதிருப்பதாகக் கூறு கின்றனர்.

மிளகாய் ... திரட்சியடைகையில் ஒரு வகைப் புழுவினல் தாக்கப் பட்டு உதிர்வதாகக் கூறப் படுகிறது. இதற்கு மருந்து தெளிப்பதனல் பலன் ...

# திரட்டு நிதிக்கு 6 கோடி ரூபாய்!

கோட்டை, வெள்ளி

அரசாங்க சபைகள், அர சாங்க கூட்டுஸ்தாபனங்கள் ஆகியன திரட்டுநிதிக்கு 6 கோடி ரூபாவழங்கியுள்ளன. மக்கள் அரசாங்கம் அர சாங்கதுறைக்கு கூடிய முக் கியத்துவம் கொடுத்ததால் மேற்படிநிதி கிடைத்துள்ள தாக நிதியமைச்சர் டாக் டர் என். எம். பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு திரட்டுநிதிக்குப் பணம் வழங்கக்கூடிய 16 ஸ்தாபனங்களை நிதியமைச் சர் தெரிவுசெய்துள்ளார். ஊழியர்களுக்கான போனஸ் பணம், சேமலாப நிதியாதி யவற்றையெல்லாம் கழித்த பின்னரே இத்தாபனங்கள் திரட்டுப்பணத்துக்கு நிதி வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி தொகையில் ஒரு கோடி 50 லட்சம் ரூபா கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

### வானெலி விவசாய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

வருகிற ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மகாவித்தியால யத்தில் வானெலி விவசாயப் போட்டி ஒன்று நடைபெற விருக்கிறது.

இப்போட்டி விழாவில் பிர தம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு மகாதந்திரிகே விமல னந்த அமரசேகர கலந்து கொள்வார் யாழ் மாவட்ட விவசாய உத்தியோகத்தர் திரு பொ மாணிக்கவாசக ரின் வரவேற்புரையும், புஜாநடனம், இலாஞ நடனம், மோகினி நடனம், மயில் நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் விவசாய அறிவுப் போட்டி யில் வெற்றி பெற்ருேருக்கு திருமதி எம் ரீ டபிள்யு அமரசேகர பரிசில்கள் வழங்குவார்.

### பஸ்சேவை சீரடையும்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை இபோச வுக்குச் சில புதிய பஸ் வண்டிகளும் பழுதடைந்து நிற்கும் வண்டிகள் சில வற்றுக்கான புதிய இயந் திரங்கள், உதிரிப்பாகங்கள் ஆகியனவும் கிடைத்துள்ள தால் விரைவில் இப்பகுதி பஸ் சேவை சீரடையுமென உயர் அதிகாரி ஒருவர் கூறினர் இதேபோல வட பகுதியில் உள்ள மற்றைய பஸ்நிலையங்களுக்கும் உதவி கிடைக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கல்விக் கூடங்கள் சமுதாயத்தின் சொத்து'

யாழ்ப்பாணம், சனி

கல்விக்கூடங்கள் சமுதாயத்தின் சொத்தாக ஒவ்வொரு மாணவர்களாலும் கருதப்பட வேண்டும். எந்த விதமான ஏற்றத்தாழ்வுகளுக்கும் கல்விக்கூடங்களில் இடம் அளித்தல் ஆகாது மாணவர்களிடையே ஒற்றுமையும் சகோதரத்துவமும் நிலவ வேண்டும். மாணவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து வேறு வழிகளில் கவனம் செலுத்தாது கல்வியிலேயே கவனம் செலுத்த வேண்டும்''

பலாலி பல்கலை தொழில் நுட்ப நிறுவனத்தின் சிரமதானத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மத்தியில் நிறுவனத்தின் பதில் அதிபர் கே. சிவபாலன் பேசும்பொழுது மேற்கண்டவாறு கூறினார் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எந்தஒரு தேவைக்கும் நாம் அரசாங்கத்தை எதிர்பார்த்திருக்கத் தேவையில்லை. எமது பணத்தைத்தான் அரசாங்கம் ஊதியமாகவும் உபகாரப்பணமாகவும் எமது தேவைகளுக்கு திரும்பத்தருகிறது. சிரமதானத்தில் ஈடுபட்டு எந்தஒரு வேலையையும் செய்யும் பொழுது எமது தேவைகள் எம்மால்பூர்த்தி செய்யப்படுவதுடன் அரசாங்கத்தை நம்பியிருக்கவேண்டிய நிலையையும் மாற்றுகின்றது. சிரமதானத்தில் ஈடுபடுவதினால் நமக்குள் நாமே திருப்திப்படும் நிலைஏற்படும்பொழுது மனநிறைவையும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றோம்.

பல்கலை தொழில்நுட்ப மாணவர்கள் நிறுவனத்தின் வளவை துப்பரவு செய்தார்கள். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாதுவேலையில் ஈடுபட்ட மாணவர்களை அதிபர் பாராட்டினர்.

## 'ஒருவருடத்துக்கு தேவையான உப்பு கையிருப்பிலுள்ளது!

யாழ்ப்பாணம், சனி

இவ்வருட விளைச்சலைநீக்கி நாட்டுக்கு ஒருவருடத்துக்குத் தேவையான உப்பு கையிருப்பிலுள்ளதாகவும் ஆதாரபூர்வமாக இவ்விபரங்களிலிருந்து உப்புத்தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எவ்வித காரணமுமில்லை என்று இலங்கை உப்புக்கூட்டுத்தாபன டைரக்டர் சபை உறுப்பினரும், வடபகுதி லங்கா சமசமாஜக் கட்சிக் காரியதரிசியுமான திரு அ. விசுவநாதன் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மக்களின் உபயோகத்திற்கு மாதாமாதம் 7,000தொன் உப்புதேவைப்படுகிறது இது இலங்கைமுழுவதுமுள்ள 600 மொத்த வியாபாரிகள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது அவ்வியாபாரிகள் தமக்குத் தேவையான அளவு உப்பை உப்பளத்திலிருந்து அந்தர் ஒன்றுக்கு ரூபா 5-50 வீதம் வாங்குகிறார்கள் அவர்கள் பெறும் உப்பினளவிற்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

இவ்வாண்டு தைமாதத்தில் 6,800 தொன் உப்பும், மாசியில் 7,020 தொன் உப்பும் விநியோகிக்கப்பட்டது பங்குனிமாதம் முதல் வாரத்திலேயே 4,000 தொன் உப்பு வியாபாரிகளுக்குவழங்குவதற்கான உத்தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன இதை தவிர இவ்வருட விளைச்சலை நீக்கி நாட்டுக்கு ஒரு வருடத்திற்கு தேவையானஉப்பு கையிருப்பில்உள்ளது ஆதாரபூர்வமான இவ்விபரங்களிலிருந்து உப்புத்தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எவ்வித காரணமும்இல்லை என்பது புலனாகிறது

அரசாங்கத்தின்மேல் வீண் பழி சுமத்தும் நோக்கத்தையும் கொள்ளை லாபம் அடிக்கும் எண்ணத்தையும் கொண்டு சிலவிசமிகள் செய்யும் பொய்ப்பிரசாரங்காரணமாகவே உப்புத்தட்டுப்பாடு என்ற பீதி நாட்டில் ஏற்பட்டுள்ளது

செயற்கை முறையான தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயலும் மற்றையோரும் உடனடியாக இவ்விஷமப்பிரசாரத்தை நிறுத்த நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும் இல்லையெனில் உப்பு விற்பனையில் அவர்களுக் ஏகபோக உரிமை முறியடிக்கப்படும்

நமது நாடு உப்பு உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது என்பதை நாட்டுமக்கள் மனதிற்கொண்டு விஷமப்பிரசாரங்களை நம்பாதிருக்க வேண்டும், உப்பைப் பதுக்கிவைக்கும் தேசத்துரோகிகளையும் காட்டிக்கொடுக்கமுன்வரவேண்டும்.

### சிரமதான மூலம் வீதி சீரமைப்பு

திருக்கோணமலை, வெள்ளி

சாம்பல்தீவு ஆத்திமோட்டைச்சேர்ந்த இரண்டு வீதிகள் சிரமதான முறையில் சீரமைக்கப்பட்டன. சீரமைப்பு வேலைகளை திருமலைப் பிரிவுக்காரியாதிகாரி சிவஸ்ரீ சாப்பசிவஐயர் முன்னின்று நடாத்திவைத்தார். அப்பகுதிமக்கள் அனைவரும் இவ்வமைப்பு வேலைக்கு உதவி அளித்தனர் இதேநாளில் இப்பகுதிக்கான விளையாட்டரங்கொன்றும் சிரமதான முறையில் அமைக்கப்பட்டது.

### பல்கலைக்கழகத்தில் அமைதி நிலவுகிறது

கோட்டை, வெள்ளி

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிலைமை சீராகவும் அமைதியாகவும் இருப்பதாக பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிலைமை பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனதா விமுக்தி பெரமுன தலைவரான ரோஹன விஜவீராவை கைதுசெய்ததை யடுத்து பல்கலைக்கழக வளவுக்குள் அவரை விடுதலை செய்யக் கோரி துண்டுப்பிரசுரங்கள் சுவர்களில் ஒட்டப்பட்டன. இதையடுத்து அங்கு வெடிகுண்டு ஆபத்து ஏற்படலாமெனப் பரவிய வதந்திகளைத் தொடர்ந்தே மாணவிகள் சிலர் பீதியடைந்து தம் வீடுகளுக்குச் சென்றனர்.

அதிகமான மாணவர்கள் வெளியேறியதாகக் கூறப்பட்ட வதந்தி பொய்யெனவும் மேற்படி அதிகாரி தெரிவித்துள்ளார்.

## 'அனுபவப் பாடம் தான் உண்மையான போதனை'

சங்கானை, வெள்ளி

''பாட நூலில் உள்ளதை மாணவன் செவியூடாக மூளைக்குத் திணிப்பதே கல்விப் போதனை என்பது தவறு. மாணவன் சுரம் அறிந்து, வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குரிய வழி வகைகளை அறியவைக்கப் பல அனுபவங்களைப் பாடசாலையில ஏற்படுத்துவது தான் போதனையாகும். எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் நல்வாழ்வுக்கான அனுபவங்களை ஏற்படுத்துவதற்குப் பின்நிற்கக்கூடாது சுற்றுலா, சாரணியம், கலை, விளையாட்டு ஆகிய பல துறைகளிலும் பயிற்சியளிப்பவர்களே ஆசிரியர்கள்''

ஓமந்தை மகாவித்தியாலய அதிபர் திரு. மு. சிவானந்தம், திரு. ம. கதிரித்தம்பி, திருமதி சி. கதிரித்தம்பி, திரு ஞா. நவரத்தினம் ஆகியோர்க்கு ஆசிரியர் நல்வாழ்வுக்கழகச் சார்பாக நடாத்தப்பட்ட பிரிவுபசாரத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

திருவாளர்கள் எஸ் விஜயராசசிங்கம், செ. சேனாதிராசா, மு. சபாரத்தினம், கதிரவேலு ஆகியோர் ஆசிரியரது சேவைகளைப் பாராட்டினர். திரு இ கந்தசாமி தலைமைவகித்தார் எஸ். பரமேஸ்வரன் நன்றி கூறினார்.

......

### வழிகாட்டு சுற்றுலாத் திட்டம்

நுவரெலியா, வெள்ளி

இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபை வழிகாட்டும் சுற்றுலாத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இதன் அடிப்படையில் இந்நாடு மேற்குக் கரையோரக் கற்கரை, தென்கரையோரம், புராதன வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்கள். மலைநாட்டுப்பகுதி கிழக்குக் கரையோரம் என ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது இத்திட்டத்தின் படி 1976ம் ஆண்டு முடிவதற்குள் 4 500 விடுதிகளும், விடுமுறை வாசஸ்தலங்களும் அமைக்கப்படும்.

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 22ந் திகதி திங்கட்கிழமை மாலை வேம்படி 'றிம்மர்கோல்மண்டபத்தில் நாட்டு வழக்கங்களும் அவற்றின் சமய மூலக் கருத்துக்களும் எனும் தரப்பின்கீழ் ஓர் கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.


# வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது.

# உங்களுக்குத் தேவையானது றெபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனல் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றெபின் நீலம் தேவை.

றெபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள் ஆனல் முடிவில் றெபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

**ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப் பிரகாசிக்க றெபின் நீலம் பாவியுங்கள்.**

ரெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி.

GRANT 26947


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்போட்டி

# வெற்றி பெறுவோருக்கு ஐந்து உயரிய பரிசுகள்!

— நமது விளையாட்டு நிருபர் "தேவா" —

யாழ்ப்பாணம், சனி

சென்றல்-சென் ஜோன்ஸ் கல்லூரிகளின் கிரிக்கெட் மோதல் தற்போது யாழ் நகரில் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது வீதிகளிலும், யாழ் நகரில் உள்ள உயர்ந்த கட்டிடங்களிலும் வாகனங்களிலும் இருகல்லூரிகளின் கொடிகள் மிகக் கெம்பீரமாகப் பறக்க விடப்பட்டுள்ளன.

இரு கல்லூரிகளின் மாணவர்கள், தத்தமது கொடிகளை சைக்கிள்களிலும், சேட்களிலும் அணிந்திருக்கின்றனர்கள். இக் கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தமது கல்லூரிகளின் கொடிகளை கார்களிலும், சிலர் தலைகளில் ஆடையும் 'காப்' ஆகவும், இன்னும் சிலர் கைகளிலும், காலசட்டை பட்டியாகவும் அணிந்து யாழ் நகர் வீதிகளில், வீதிவலம் வர ஆரம்பித்து விட்டனர்

மேற்படி இரு கல்லூரிகளின் 73-வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டியை, மாணவர்களும், ரசிகர்களும் கண்டு களிப்பதற்கு இம்முறை விசேஷ ஏற்பாடுகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றது.

### பரிசு வழங்குவோர் விபரம்

'ஸ்ரில்' புகைப்படப் பிடிப்பாளர் திரு. கனகலிங்கம் (சிட்டு)

யாழ். மெட்டல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனம்.

'லிங்கம் ரெக்ஷஸ்' பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

"பிறின்ஸ்" ஸ்ரூடியோ பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

காலஞ் சென்ற பிரபல விளையாட்டு வீரரும், யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவருமான திரு. வி. ரி. மகாலிங்கத்தின் ஞாபகார்த்தமாக இவரின் சகோதரர் திரு வி ரி சிவலிங்கமும் ஒரு பரிசை வழங்க முன் வந்துள்ளார்.

**யாழ் மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் 73-வது கிரிக்கெட் போட்டியையொட்டி 'ஈழநாடு' நடாத்தும் 'கிரிக்கெட் புதிர் போட்டி'**

### போட்டி நியந்தனைகள்

0 ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.

0 எல்லாம் சரியான விடைகளுடன் கூப்பன் கிடைக்காத பட்சத்தில் ஆகக் கூடிய சரியான விடையுடன் வரும் கூப்பனுக்கு முதல் பரிசு வழங்கப்படும். கூடுதலான சரியான விடைகளை அனுப்பும் மற்றும் நால்வருக்கும் பரிசுகள் வழங்கப்படும்

0 கூப்பன்களை 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர், 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

0 புதிர் போட்டிக்கான மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

0 கூப்பன்களுடன் வராத விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

0 புதிருக்கான விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 22-3-71 நண்பகல் 12 மணிக்கு முன்.

0 உங்கள் விடைகளை அழகாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்,

### புதிருக்கான கேள்விகள்

(1) கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கான கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு 'பூவா-தலையா' போட்டுப் பார்க்கும் போது யாருக்கு வெற்றி கிடைக்கும்?

(2) கிரிக்கெட் போட்டியில் யாருக்கு இறுதி வெற்றி கிடைக்கும்?

(3) கூடுதலான விக்கெட்டுக்களை 'பேஸ்மன்'களா 'ஸ்பின்னர்'களா எடுப்பார்கள்?

4) முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்களை எந்தக் கோஷ்டி எடுக்கும்?

(5) இரண்டு இன்னிங்ஸிலும் இரு கோஷ்டிகளிலும் யார் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்துவார்கள்?

(6) முதல் இன்னிங்ஸில் சென். ஜோன்ஸ் காப்டனு சென்றல் காப்டனு கூடுதலான ரன்களை எடுப்பர்?

(7) இப்போட்டியில் 'ஒல் றவுண்டர்'ருக்கான பரிசை யார் பெறுவார்கள்?

(8) இப்போட்டிக்கு யார் யார் மத்தியஸ்தம் (அம்பயஸ்) வகிப்பார்கள்?

"ஈழநாடு"

நடாத்தும்

## கிரிக்கெட் 'புதிர் போட்டி' கூப்பன்

பெயர் ..............................

விலாசம் ..............................

..............................

..............................

கையொப்பம்

சென் ஜோன்ஸ்

## இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெறற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் இன்னிங்ஸ் விகதியாசத்தால் வெற்றிபெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 189 ஓட்டங்களைப்பெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 95 ஓட்டங்களையும் 2-வது இன்னிங்ஸில் 65 ஓட்டங்களையும் பெற்றது.

சென ஜோன்ஸ் கல்லூரியின் பந்தெறிவீரர் ஸ்ரீ ராமரட்ணம் இப்போட்டியில் மொத்தம் 11 விக்கெட்டு வீழ்த்தினர். 2-வது இன்னிங்ஸில் 35 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(தே. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 20-3-71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள் 7-15 மெல்லிசை 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344மீ அன் 49 மீ**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள் இரவு 6-15 மெல்லிசை, 7-00 ஞானமஞ்சரி, 7-15 புல்லாங்குழல், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## முல்லைத்தீவு பஸ்சேவை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு பஸ்சேவை மிகவும் மோசமடைந்துள்ளது. இந்த டிப்போவுக்குச் சொந்தமான 11 பஸ்களில் தற்போது 3 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளன பல சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் பிரயாணிகள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி உள்ளனர் நடந்து முடிந்த ஜி ஸி. ஈ. பரீட்சைக்குத் தோற்றிய பல பரீட்சார்த்திகளும் தமது பரீட்சை நிலையங்களை அடைவதில் மிகக் கஷ்டமடைந்தனர்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 6-ம் திகதி (20-3-71)

மேஷம்- மனம் நிறைந்த வாழ்வு இன்று கிடைக்கும். அறவழிகளில் நாட்டம் பிறக்கும். இறைநம்பிக்கை நன்று

ரிஷபம்- தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம்,

மிதுனம்- இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும்.

கடகம்- திரைமறைவில் சதித் திட்டம் உருவாகும். அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர்.

சிம்மம்- தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். தெய்வத்தின் துணையும் உண்டு.

கன்னி- வியாபாரத்துறையில் துரித முன்னேற்றம். புதுத்துறைகளை மனம் நாடுகள் பயன்தரும் பிரயாணம் சுபதினம்,

துலாம்- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக் கொள்வீர்கள்.

விருச்சிகம்- குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும். திடீர் நடவடிக்கைகள் மேற்கொள்வது நன்று.

தனுசு- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும் திருடர் பயத்திற்கும் இடமேற்படும். காணிப் பிணக்கு கவலையைத் தரலாம்.

மகரம்- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும் சிலர் புனைத்துறைகள் கேட்கவும் நேரிடும்.

கும்பம்- சீறிவரும்கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும்.

மீனம்- கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். தாய்வழிச் செய்தியும் வரலாம். இன்று சுப தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

உலக குத்துச்சண்டை வீரர்

## ஃபிரேஸியருக்கு 'பிரஷ'

பிலடெல்பியா, மார்ச் 19

புகழ் பெற்ற உலக அதிபார குத்துச்சண்டை வீரர் ஜோ ஃபிரேஸியர் இனிமேல் குத்துச் சண்டையில் ஈடுபட மாட்டார். தான் குத்துச் சண்டை போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக பிலடெல்பியா வைத்தியசாலையொன்றில் தற்போது சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் அவர் தெரிவித்துள்ளார்.

இரத்தக் கொதிப்பு நோயினால் ஜோ ஃபிரேஸியர் தாக்கப்பட்டுள்ளாரென்றும் ஆனால் கடுமையாகத் தாக்கப்படவில்லையென்றும் மேற்படி வைத்தியசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

எனது மனைவி மற்றும் என் குடும்பத்தினரின் நலன் கருதியே நான் குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுகிறேன்' என மேலும் ஜோ ஃபிரேஸியர் தெரிவித்துள்ளார்

ஃபிரேஸியருக்கும், பிரபல குத்துச்சண்டை வீரர் களியஸ் கிளேக்குமிடையில் நியோக்கில் அண்மையில் நடைபெற்ற உலகக் குத்துச் சண்டைப் போட்டியில் ஃபிரேஸியர் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் புதிய முஸ்லிம் பாடசாலை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவில் ஒரு முஸ்லிம் பாடசாலையொன்று அமைக்கப்பட வேண்டும் என்று 1967ம் ஆண்டு இங்குள்ள முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இன்று வெற்றிகண்டுள்ளது. வவுனியாத் தொகுதி முன்னாள் எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தின் முயற்சியால் பெறப்பட்ட பகிரங்க வேலைப் பகுதியினருக்குச் சொந்தமான காணியில் முஸ்லிம் மக்களின் உதவியுடன் பாடசாலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது

அடுத்த மாத முற்பகுதியில் கல்வி உதவியமைச்சர் திரு. பி. வை. துடாவை இப்பாடசாலையைத் திறந்து வைக்கவிருக்கிறார். இதற்கான முயற்சிகளை இப்பகுதி முஸ்லிம்மக்கள் மேற்கொண்டுள்ளனர்.


புதிய நெக்டோ




GRANT 13852 71


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய லோகசபைக்கூட்டம் ஆரம்பம்

# தமிழ், தெலுங்கு மொழிகளிலும் எம.பி.க்கள் பதவிப்பிரமாணம்

# தெலுங்கானு சமித்தி தலைவர் சமஸ்கிருதத்தில் சத்தியம்

புதுடில்லி, மார்ச 19

**தேர்தலுக்குப் பின்னர் இந்திய லோகசபை இன்று தனது முதலாவது கூடடத்தை ஆரம்பித்தது.**

**அங்கத்தவர்கள் அனைவரும் பதவிபிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.**

இந்தி, தமிழ், தெலுங்கு குஜராத், மராத்தி போன்ற பல்வேறு பாரத மொழிகளிலும் அங்கத்தவர்கள் சத்தியப்பிரமாணங்களை நிறைவேற்றினர்கள்.

முதலாவதாக பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். அவரைத் தொடர்ந்து சக மந்திரிகள் சத்தியப் பிரமாணம் செய்தார்கள். பின்னர் ராஜ்ய வாரியாக அங்கத்தவர்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் தமிழில் பதவிப்பிரமாணம் செய்தார்கள்.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இந்தி மொழியில் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். செலுங்கானு சமித்தி தலைவர் சமஸ்கிருதத்தில் பதவிப் பிரமாணம் செய்தார்.

பதவிப்பிரமாணம் செய்ய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி எழுந்து சென்றபொழுது அங்கத்தவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

கடந்த 48 ஆண்டுகளாக ஜபல்பூர் ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்துவரும் முதியவரான சேட்கோவிந்த தாஸ் சத்தியப்பிரமாணவைபத்துக்குத் தலைமை வகித்தார். அவர் கேட்டுக் கொண்டதின்படி அங்கத்தவர்கள் சில நிமிடங்கள் எழுந்து மௌனமாக இருந்தார்கள்.

புதிய லோகசபையில் அரசாங்கத்தரப்பில் அங்கத்தவர்கள் அதிகமாக இருப்பதால் அங்கு ஆரவாரமாக விருந்தது. எதிர்க்கட்சியில் உறுப்பினர்கள் குறைந்து போய், ஒரு மூலையில் ஒதுங்கிப்போய் இருந்தார்கள். பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டவர்களில் நேற்று பதவி ஏற்ற புதிய ஐந்து அமைச்சர்களும் அதிக கவனத்தைக் கவர்ந்தார்கள்.

அரசியல்

## நிர்ணயசபை நிகழ்ச்சிகளை ஒத்திப்போடுக!

கொழும்பு, வெள்ளி

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டுமானுல் அவசரகால நிலைமை தீரும்வரை அரசியல் நிர்ணயசபை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கு மாறு ஜனநாயகப் பாதுகாப்பு முன்னணி செயலாளர் திரு. ஆர். ஈ. ஜெயதிலகா பிரதமருக்குச் சமர்த்பித்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அவசரகால நிலைமையில் பொதுமக்கள் அரசியல்திட்டம் பற்றிய தங்கள் கருத்துக்களை வெளிப்படையாக கூறுவது முடியாத காரியமாகும். இந்தநிலையில் அரசியல் நிர்ணயசபை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவது ஜனநாயக கோட்பாடுகளைப் பரிகாசம் செய்வதாகும்

கடந்த 24 மணித்தியாலத்துள் நாட்டில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லையென்றும் பாதுகாப்பு நிலைமை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதென்றும் தேசிய பாதுகாப்புச்சபை அறிவித்துள்ளது. சேகுவேரா இயக்கத்தினரை வேட்டையாடும் முயற்சியும் இதேவேளையில் நாடெங்கும் நடைபெற்று வருகிறது.

(சி. பி ஏ)

## கோஷ்டிச் சண்டையில் ஒருவர் கொலை; 5பேர் காயம்

மாண்ட்டபுரம், வெள்ளி

வசாவிளானில் இரு கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற சண்டையில் இளையவன் சின்னக்குட்டி என்பவர் கொலையுண்டார்.

கொலையுண்ட இளையவன் சின்னக்குட்டி இன்று காலை கள்ளிறக்கிக்கொண்டு சைக்கிளில் வரும்பொழுது கெல்லிப்பளை வசாவிளான் வீதியில் கணபதி வீட்டிற்கு அண்மையில் ஏ. நடேஸ் என்பவர் வழிமறித்து உலக்கையால் அடித்ததைத் தொடர்ந்து அங்குவந்த இருபகுதியினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும், இதில் பொல்லு, கத்தி மற்றும் இவை போன்றவை பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

எஸ். காசியன், முருகன், கணபதி, லட்சுமி, பரமேஸ்வரி ஆகியோர் காயமடைந்தனர். காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஜோசப் தலைமையில் பொலிஸ்கோஷ்டி ஸ்தலத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்திவருகிறது.

இதை ஒட்டி மேலும் கலவரம் நடைபெறலாம் என்பதினுல் இப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

……

## பொய்வதந்திகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஆசிரியராவர் கேகாலைப்பகுதியில் கைக்குண்டு வைத்திருந்த இருவரையும் கலிகமுவத்தொகுதியிலுள்ள பின்தெனிய என்னும் இடத்தில் 300 கைக்குண்டுகளைப் பொலிசார் கண்டெடுத்தனர் நீர்கொழும்பில் கைக்குண்டு தயாரிப்பதற்கான ஈயம் மற்றும் பொருட்களை வைத்திருந்த மூன்று இளைஞர்களையும், மதுகமப் பகுதியில் இரகசியக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது 27 பேரையும், பொலிசார் கைது செய்தனர்

கொழும்பப் பகுதிக்கு வெளியிலுள்ள ஹங்வொடவில என்னும் இடத்தில் அச்சகமொன்றைப் பொலிசார் சோதனையிட்டதில் நாசவேலைகளைத் தூண்டும்வகையில் அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன துண்டுப்பிரசுரங்களை அச்சடித்துக்கொண்டிருந்த அச்சகஉரிமையாளர் ஒருவர் உட்பட மற்றும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் பிபிலிக் கிராமசபைகிளாக் ஒருவர் ஒரு சூட்கேசில் 38 டைனமட்டுடன் பொலிசாரால் கைசெய்துயப்பட்டார்.

பொய்வதந்திகளைப்பரப்புவோருக்கு குறைந்தது 3 மாதம் தொடக்கம் 20 ஆண்டுகள் வரை கடுமையான தண்டனை அளிக்க இடமளிக்கப்பட்டுள்ளது.

[சி. பி. ஏ.]

……

யாழ். இந்து — மத்தியகல்லூரி

## ஆதரவாளர் மோதல்; ஆட்டம் நின்றது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட் விளையாட்டுப்போட்டி இருபகுதி ஆதரவாளர்களும் விளையாட்டு மைதானத்திற்குள் நுழைந்து கற்கள் போத்தல்கள் வீசி கலாட்டா செய்ததால் நேற்று இடை நடுவில் கைவிடப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தின்முடிவில் யாழ். இந்துக்கல்லூரிக் கோஷ்டியினர் சகல விக்கட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களை எடுத்திருந்தனர் மத்திய கல்லூரியினர் தமது முதலாவது இன்னிங்சில் 7 விக்கட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

நேற்று நண்பகல் ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது இருதரப்பு ஆதரவாளர்களும் கோஷமிட்டும், நடனமாடியும், வெடிகொளுத்தியும் உற்சாகமூட்டிக்கொண்டிருந்தனர் திடீரென்று இருதரப்பு ஆதரவாளர்களுக்கு மிடையில் கைகலப்பு ஏற்பட்டது. கல்வீச்சு, போத்தல் வீச்சு, முதலிய சம்பவங்களும் இடம்பெற்றன. மைதானத்தினுள் ஆதரவாளர்கள் நுழைந்து விக்கட்டுகளை எடுத்து அடித்து நொறுக்கினர். ஆட்டப்பாதையில் விரிக்கப்பட்டிருந்த தும்புச் சாக்கை சிலர் வெளியே வீதிக்கு இழுத்துச் சென்றனர்.

மாணவர்கள், மற்றும் பார்வையாளர்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர்.

…—

## ரூ. 75 ஆயிரம் கடனுதவி

பருத்தித்துறை, வெள்ளி

உள்ளூர் கடன் அபிவிருத்திச் சபை நெல்லியடிப் பட்டின சபைக்கு ரூபா 75,000 வழங்கியுள்ளதையடுத்து, நெல்லியடிப்பட்டின மத்திய நூல் நிலையத்திற்கு மின்சாரம் விநியோகிப்பதற்காக உபமான்யம் வழங்க அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது நெல்லியடிச்சந்தியில் தரைக்கடியில் மின்இணைப்புச்செய்வதற்கு சி. எப். ரி ஸ்தாபனத்தாரின் மதிப்பீட்டின்படி இப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாம். பட்டின சபை எல்லைக்குடபட்ட பகுதிகளில்உள்ள வீதிகளும் விரைவில் திருத்தப்படுமாமம்.

…—

## சிறுமியைக் கார் மோதியது

யாழ்பாணம், வெள்ளி

வீட்டுப் படலையின் ஓரமாக நின்றுகொண்டிருந்த மூன்றரை வயதுச்சிறுமியை கார் ஒன்று மோதியதால் சிறுமி படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

சண்முகலிங்கம் சிவாஜினி என்ற சிறுமியை நேற்றுமுன்தினம் தட்டாதெருச் சந்தியில் உள்ள வீடொன்றின் முன்னுல் வைத்து மோதிய கார் சாரதி விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

— —

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால தடைஉத்தரவுகளால்இன்று நடைபெறவிருந்த லங்கா தொழிற்சங்க சம்மேளனத்தின் ஊர்வலமும் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அவசர சேவைகள் ஸ்தம்பிதம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் அவசர சேவைகள் ஸ்தம்பிதமாகியுள்ளன. சங்கானை, சுன்ஞகம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அச்சுவேலி போன்ற பொலிஸ் நிலயங்களுக்கு தலைமைக் காரியாலயமாக உள்ள காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் உள்ள ஜீப் வண்டிகள் மோட்டார் சைக்கிள்கள் சைக்கிள்கள் அனேகமாக பழுதடைந்துவிட்டதால் மக்களின் அவசர தேவைகளை உடன் நிறைவேற்ற முடியாது உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கள்ளுக் காலமான இக்காலத்தில்தான் பொலிசார் வீதிகளில் ரோந்து சுற்ற வேண்டியதும் வடிசாராயம் வடிப்பதை தடைசெய்வதுமான இந்நேரத்தில் இப்படி வாகனங்கள்பழுதடைந்துள்ளதால் என்ன செய்வதென்று தெரியாது பொலிசார் கஷ்டம் அடைந்துள்ளனர்.

பொலிசார் அத்தியாவசிய தேவைகளில் ஈடுபடாததால் காங்கேசன்துறைப் பகுதிகளில் கள்வர் நடமாட்டமும் தீய செயல்களும் தலையெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மிக விரைவில் பொலிசாரின் வாகனங்கள் திருத்தப்பட்டு சாரதி இங்குவந்தால் இச்சேவைகள் சீரடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டுப் போட்டி

உரும்பராய், வெள்ளி

கோப்பாய் வட்டாரக் கனிட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 23-ம் திகதி பிற்பகல் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. [illegible] நடைபெறவிருக்கும் இப் போட்டிக்கு [illegible] தினராக பிரதம கல்வி அதிகாரி திரு. அ. சந்திரசேகரம்பிள்ளை கலந்து கொள்கிறார்.

……

## சமாசத்தின் கைங்கரியம்

சுன்ஞகம், வெள்ளி

இப்பொழுது நிலவும்சீனித் தட்டுப் பாட்டால் மக்கள் பாதிக்கப்படாத வகையில் வலிகாமம் வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தன் வசம் இருந்த 500 அந்தர் சீனியைத் திருப்திகரமான முறையில் விநியோகித்தது!

இச்சங்கம் ஒருபங்கீட்டரிசிப் புத்தகத்திற்கு 8 அவுன்ஸ் வீதம் கூட்டுறவுச் சங்கங்கட்கும் உத்தரவு பெற்ற வியாபாரிகட்கும் உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள தேநீர்க் கடைகட்கும் பலாலி விமான நிலையம் இராணுவ முகாம் வசாவிளான மௌனசபை மடத்திற்கும் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி உத்தரவுப் பத்திரத்தின் பேரில் விநியோகம் செய்து நுகர்வோர் தம் தேவையைப் பூர்த்தி செய்துள்ளதாகத் தெரிகிறது.

……

## பெற்றோர்தினவிழா

யாழ்ப்பாணம், சனி

இன்று மாலை மகாஜனக் கல்லூரி திறந்தவெளியரங்கில் பெற்றோர்தின விழாவும் கனிட்டபாடசாலைப் பரிசளிப்புவிழாவும் நடைபெறவுள்ளது.

வடமாநிலக் கல்வியதிபர் திரு டபிள்யூ. டி. சிமனாதந்தில பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" [illegible] யாழ்ப்பாணம் [illegible] கோவில் [illegible] 68-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ந் [illegible] வெளியிடப்பட்டது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org